# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC . 51 /2018.** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.2 மகாலிங்கம்** |
| **Fathers Name/Husband Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2023

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை:**

1.நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அசா.1ஐ தெரியும். எனக்கு அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். சாட்சி பாண்டி இறந்துவிட்டார். விபத்தில் இறந்துபோன பழனி என்பவர் எனக்கு பெரியப்பா உறவுமுறை ஆவார். ஆகஸ்ட் மாதம் 2017ம் வருடம் ஒருநாள் காலை உணவிற்கு பின் 10.00 மணிக்கு மேல் வேலு டீக்கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது நானும், அசா.1 சாட்சி பாண்டி ஆகியோர் டீ சாப்பிட்டு கொண்டிருந்தோம். திடீரென்று சத்தம் கேட்டது வேலு டீக்கடைக்கு எதிரே கூட்டம் கூடிவிட்டது. அசா.1 போய் பார்த்தார். அசா.1 நம்ம அப்பாடா என்று சொன்னதும் நானும் ஓடிச்சென்று பார்த்தேன். அரசு பேருந்து எனது பெரியப்பா மீது மோதியிருந்தது. அதில் அவர் தலையில் அடிபட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார். அரசு பேருந்து அங்கே தான் இருந்தது. டிரைவரை நான் பார்க்கவில்லை. அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்து மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றோம். அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ரோட்டிற்கு வடக்கே வேலு டீக்கடை உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** அசா.1 என்னை அழைத்தபின்பு தான் நான் அங்கு சென்றேன். ஏற்கனவே அங்கு கூட்டம் கூடியிருந்தது. அசா.1 கூட்டத்தை விலக்கி பார்த்துவிட்டு என்னை கூப்பிட்டார். இறந்தவர் எப்படி வந்தார் என்று நான் பார்க்கவில்லை. விபத்தை நான் பார்க்கவில்லை. நடந்த பின்னர் தான் அங்கு சென்று பார்த்தேன். சம்பவயிடத்திற்கு பின்னால் சாலையில் தடுப்பு அமைத்திருந்தார்கள். வாகனங்கள் அந்த தடுப்பை தாண்டி செல்லவேண்டும் என்றால் மெதுவாகத்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் திடீரென சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் நான் அந்த விபத்தை பார்க்கவில்லை.

S.d./ Mahalingam

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.